DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.730/2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW1

| | | |
|---|---|---|
| List of Witness | : | LW1 |
| Name | : | **சக்திவேல்** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | |

**( A3 called absent. A4 present, For A3, dispense with petition filed and allowed. )**

Solemnly affirmed by Selvi M.K.Anusha, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் கடந்த 05.04.2013 ல் குருவிகுளம் காவல்நிலையத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். நான் சங்கரன்கோவில் டவுண் காவல்நிலையத்தில் 20.12.2010 ம் தேதி தலைமைக் காவலராக பணியில் இருந்த போது, நான், ஆய்வாளர், 1088, 1891, ஆகியோர்கள் சகிதம் ரோந்து சென்றபோது பழைய பஸ் நிலையம் அருகே பஸ் ஸ்டாண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிற்கும் இடத்தில் நாங்கள் அனைவரும் நின்று கொண்டிருக்கும் போது ஒரு பெண்மணி அங்கும் இங்கும் அலைந்து மறைந்தார்கள். நாங்கள் சந்தேகப்பட்டு பிடித்துநிலையத்திற்கு கொண்டு சென்றோம். அங்கு வைத்து பார்க்கும் பொழுது, 100 ரூபாய் மற்றும் 500 ரூபாய் நோட்டுக்களை ஜெராக்ஸ் எடுத்து பையில் வைத்திருந்தார்கள்.

அவர்கள் பெயரை கேட்டு விசாரிக்க லட்சுமி என்கிற பிச்சையம்மாள் என்று கூறினார்கள். மேலும் அவர்கள் தனக்கு மேற்படி ரூபாய் நோட்டுக்கள் சிவகாசியை சேர்ந்த மாரியப்பன் என்பவரிடம் இருந்து கிடைத்தாக சொன்னார்கள். அதன் பிறகு மாரியப்பன் வீட்டிற்கு சென்றோம். மாரியப்பன் வீட்டில் ஜெராக்ஸ் மெசின் ரூபாய் நோட்டுக்கள் கொஞ்சம் இருந்தது., கைப்பற்றி சங்கரன்கோவில் நகர் காவல்நிலையம் கொண்டு வந்தோம். செபஸ்டியான், மாரியப்பன், பிச்சம்மாள் ஆகியோர்களை காவல்நிலையம் கொண்டு வந்து ஒப்படைத்தேன். மேற்படி நபர்களை ஒப்படைத்து விட்டு நான் வந்துவிட்டேன் ஆய்வாளர் வழக்கு குறித்து என்னை விசாரித்தார்கள்.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**